செ.வெ.எண்: 525 **செய்தி வெளியீடு** நாள்: 18.8.2011

**மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி. எஸ்.கோகுல இந்திரா அவர்கள்**

**தமிழ்நாட்டில் சுற்றுலா மேம்பாடு குறித்து சுற்றுலாத் தொழில் தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இன்று (18–8–2011) கலந்துரையாடினார்கள்.**

உலக அளவில் தமிழ்நாட்டை ஒரு சிறந்த சுற்றுலா தலமாக உருவாக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் **திருமதி. எஸ்.கோகுல இந்திரா** அவர்கள் இன்று (18–8–2011) சென்னையில், சுற்றுலாத் தொழில் தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் 'தமிழ்நாட்டில் – சுற்றுலா மேம்பாடு' குறித்து கலந்துரையாடினார்கள்.

தமிழ்நாட்டை மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக உருவாக்க தேவையான திட்டங்களை செயல்படுத்துவது சம்மந்தமாக சுற்றுலாத்தொழிலில் ஈடுபட்டுள்ள முன்னனி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக இன்று ஆலோசனை நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு.வி.கு.ஜெயகொடி, இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் ஆணையர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., இந்திய சுற்றுலாத்துறையின் மண்டல இயக்குநர், திரு.ஜெ.பி.ஷா, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மண்டல மேலாளர் திரு.எம்.எஸ்.செங்குட்டுவன், தென்னிந்திய ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள் சங்கச் செயலாளர் திரு.சுதிர் நய்யார், அகில இந்திய சுற்றுலா அமைப்பாளர்கள் சங்கத் தலைவர் திரு.பி.சரவணன், சுற்றுலா வாகனங்கள் இயக்குபவர்கள் சங்கத்தின் தலைவர் திரு.நாகேந்திர பிரசாத் மற்றும் இந்திய இரயில்வே சுற்றுலா மற்றும் உணவு சேவை கழகத்தின் கூடுதல் பொது செயலாளர் திரு.எம்.கே.வர்மா, அங்கீகரிகப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகள் சங்கத்தின் தலைவர் திரு.பி.அசோகா, தெற்கு இரயில்வேயின் முதன்மை பொதுமக்கள் தொடர்பு அலுவலர், இந்திய விமான நிலைய ஆணையம், சென்னை துறைமுகம், மெடிடூர் இந்தியா, பல்வேறு ஓட்டல்களின் பிரதிநிதிகள் மற்றும் பயணிகள் விமான நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர<br>(செய்தி வெளியீடு)<br>செய்தி மக்கள தொடர்புத் துறை<br>தலைமைச் செயலகம், சென்னை-600 009